# மொறட்டுவைப் பல்கலைக்கழகம் , இலங்கை

## துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோருதல்

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்காக, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) 34 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10.04.2023 திகதியிடப்பட்ட 03/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய, மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பேரவையால், இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

துணைவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழுநேர உத்தியோகத்தர் என்பதுடன், அதன் பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்வி அதிகாரியும் ஆவார். அவர் பேரவை (Council) மற்றும் மூதவை (Senate) ஆகியவற்றின் பதவி வழி உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் அங்கம் வகிப்பார். அத்துடன் அவரே, பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அலுவலர் ஆவார்.

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகச் சட்டத்தின் (திருத்தப்பட்டவாறான) ஏற்பாடுகளின்படி, துணைவேந்தர் ஒருவர் தமது பதவிக்காலம் முடிவடைவதற்கு முன்னர் பதவியிலிருந்து விலகினால் அல்லது நீக்கப்பட்டால் ஒழிய, மூன்று (03) ஆண்டுகள் அல்லது அவர் தனது அறுபத்தைந்து (65) வயதை பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அதுவரை பதவியை வகிக்கலாம்.

பல்கலைக்கழகத்திற்கு மூலோபாய ரீதியிலான கல்வித் தலைமைத்துவத்தை வழங்குதல், பல்கலைக்கழகத்திற்குள் சிறந்த முகாமைத்துவக் கொள்கைகளை வகுத்தல், மேம்படுத்துதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றுடன் பேரவையின் தீர்மானங்களைச் செயல்படுத்துவதற்கும் துணைவேந்தர் பொறுப்பானவராவார். அவர் பல்கலைக்கழகத்தின் பொதுவான நிர்வாகச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்ய வேண்டும் என்பதுடன், கல்விச் சிறப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், நல்லாட்சி மற்றும் பக்கச்சார்பற்ற பயனுள்ள தலைமைத்துவம் ஆகிய

கொள்கைகளைப் பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரர்கள் சிறந்த கல்விசார் பின்னணியும் வலுவான ஆராய்ச்சிப் பின்னணியையும் கொண்டிருத்தல் வேண்டும். பல்வேறு தரப்பினருடன் ஆக்கபூர்வமாகவும் நடுநிலையாகவும் பணியாற்றுவதற்குத் தேவையான தனித்துவமான இடைத்தொடர்புத் திறன்களுடன், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ மற்றும் முகாமைத்துவ திறன்களையும் அவர் கொண்டிருத்தல் வேண்டும். கொள்கை ரீதியான விடயங்களில் சிறந்த புரிதலையும், தீர்மானங்களை வினைத்திறனுடன் செயல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் கொண்டிருப்பது அத்தியாவசியமாகும். மேலும், விண்ணப்பதாரர் பல்கலைக்கழகத்தின் தொலைநோக்கு, செயற்பணி மற்றும் விழுமங்கள் ஆகியவற்றை ஆழமாக புரிந்து கொண்டிருத்தல் வேண்டும். பல்கலைக்கழகம் தொடர்பான மேலதிக விபரங்களை , அதன் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து http://www.uom.lk பெற்றுக்கொள்ளலாம்.

துணைவேந்தர் அதியுயர் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்திற்கு தகுதியானவர் என்பதுடன், அடிப்படைச் சம்பளத்தின் 15% உபசரிப்புக் கொடுப்பனவிற்கும், நடைமுறையிலுள்ள விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின்படி இப்பதவிக்குரிய ஏனைய கொடுப்பனவுகளுக்கும் உரித்துடையவராவார்.

விண்ணப்பதாரர்கள் இலங்கை பிரஜைகளாக இருத்தல் வேண்டும் என்பதுடன், விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 63 வயதிற்கு உட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் முறையாக கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்துடன் கீழ்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

1. விண்ணப்பதாரரின் முழுமையான சுயவிபரக்கோவையுடன், பிறந்த திகதி மற்றும் பிரஜாவுரிமையை உறுதிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டையின் பிரதி அல்லது வேறு ஏதேனும் உறுதிப்படுத்தல் ஆவணம்.

2. பல்கலைக்கழகத்தின் அபிவிருத்திக்கான தொலைநோக்கு குறித்த கூற்றுடன் துணைவேந்தர் பதவிக்கு நியமிக்கப்படும் பட்சத்தில் தாம் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.

3. தற்போது பதவியிலுள்ள துணைவேந்தரே விண்ணப்பதாரராக இருக்கும் பட்சத்தில் அல்லது இதற்கு முன்னர் அதே பல்கலைக்கழகத்தில் துணைவேந்தர் பதவியை வகித்த ஒருவராக இருக்கும் பட்சத்தில், மேற்படி

1 மற்றும் 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக, அவரது முதல் பதவிக்காலத்தில் ஆற்றிய சேவைகளை முன்னிலைப்படுத்தும் அறிக்கை.

4. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், மொறட்டுவைப் பல்கலைக்கழகம் தவிர்ந்த வேறு ஏதேனும் அரசு சார் நிறுவனம் என்பவற்றில் யதாவதொன்றில் சேவை புரிபவராயின், அவர் குறித்த துணைவேந்தர் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியுமா என்பது பற்றிக் குறிப்பிட்டுத் தமது நிறுவனத் தலைவரால் வழங்கப்பட்ட கடிதம்.

விண்ணப்பங்கள், **21.04.2026 பி.ப 3.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக**, "பதிவாளர், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், கட்டுபெத்த, மொறட்டுவை, 10400" எனும் முகவரிக்கு பதிவுத் தபால் அல்லது கூரியர் சேவை மூலமாக அனுப்பிவைக்கப்படவோ அல்லது நேரடியாக பதிவாளரிடம் கையளிக்கப்படவோ முடியும். விண்ணப்பம் மற்றும் அது தொடர்பான ஆவணங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துணைவேந்தர் பதவி" எனக் குறிப்பிடப்படல் வேண்டும். **இதற்கு மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் ஏனைய அனைத்து துணை ஆவணங்களையும் உள்ளடக்கிய மென் நகல் பிரதி PDF** வடிவில் applications-vc@uom.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

மதிப்பீடு மற்றும் நேர்முகத்தேர்வுக்காக மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பேரவையின் விசேட கூட்டத்திற்கு அழைக்கப்படுவதற்கு தகுதிபெறுகின்ற விண்ணப்பதாரர்கள், ஒரு குறுகிய விளக்கக்காட்சியை நிகழ்த்த வேண்டும். அவ் விளக்கக்காட்சியானது குறைந்தபட்சம் பத்து (10) நிமிடங்கள் ஆனால் பதினைந்து (15) நிமிடங்களுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும்.

துணைவேந்தர் பதவிக்கான தெரிவு செயல்முறையானது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 10.04.2023 திகதியிடப்பட்ட 03/2023 ஆம் இலக்க சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இடம்பெறும் என்பதுடன், அதனை https://www.ugc.ac.lk/attachments/2442_Commission%20Circular%20No.%2003-2023.pdf எனும் இணைப்பின் ஊடாகப் பார்வையிட முடியும்.

இந்த அறிவித்தல் தொடர்பான ஏதேனும் விளக்கங்கள் அல்லது பிரச்சினைகள் குறித்து மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் பேரவையினது தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03/2023 ஆம் இலக்க சுற்றறிக்கை விபரங்கள் தொடர்பான ஏதேனும்

வியாக்கியானங்கள் அல்லது மேற்படி சுற்றறிக்கையின் பொருத்தப்பாடு குறித்த எந்தவொரு விடயமும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அத்தகைய தீர்மானமே இறுதியானதாகும்.

டி.எல். டிஷான் ஜயந்த,
பதிவாளர்,
பேரவைச் செயலாளர்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்,
இலங்கை
15.03.2026